ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

26.02.2026

1. பிரணவ மகா சக்தி தேடியே
பேருலகம் எங்கும் அலைகின்ற
தரணிவாழ் பிள்ளை செல்வங்களே
தவராஜனாக மாதருமராஜனாக

2. அரசனாக அரங்கன் என் வடிவிலே
அவதார மகிமை நடத்தி இனிதே
சரவணப் பெருமானும் அருளிவர
சரவண ஜோதியே நமோ நம என்று

3. என்றுமே பிரணவக் குடில் நோக்கி
எல்லா மக்களும் நாடி வந்து
நன்றுதரும் ஜோதி வழிபாட்டுடன்
ஞானியர் என் பீடம் வணங்கிவர

4. வருகவே வேலவனார் ஆசிதனை
வரமாக பிரணவ மகா சக்திபலம்
வருவோர் எல்லாம் அடைவரெனக் கூறி
வழங்குவேன் ஆறுமுக அரங்கனும்

5. அரங்கனும் விசுவாவசு சால் திங்கள்
அறிவிப்பேன் ஈராம் குருவார அருளாசி
வரங்கள் பெற மக்களுக்கு உரைப்பேன்
வல்லமைமிக்க அரங்கன் என் பீடம்

6. என் பீடம் அணுகி அருளமுது உண்டு
இனி சன்மார்க்க வழியே நடப்பேனென
என் மேலே சத்தியமும் உறுதியும் கொண்டு
ஏழாம் படை வீடாம் பிரணவக் குடில்தன்னில்

7. தன்னிலே நடக்கும் அன்னதான
தரும சேவையில் பொருளுதவி செய்து
அண்ணலே அரங்கா முருகா என
அனுதினமும் செபதபம் செய்து கொண்டு

8. கொண்டுமே பிரணவக் குடிலின்
குருபரன் நடத்தும் விழா தோறும்
தொண்டு செய்ய அணுகி இனிதே
தொண்டாற்றி தொண்டர்களாகி

9. ஆகியே சரணாகதி கொள்ள
அருளுடன் பொருள் பலமும்
மகிழும்படி வாழ்க்கை நலமும்
மனைவி மக்கள் மாதன யோகமுடன்

10. யோகமுடன் தன்வினை வெல்லும்
உயர் தருமம் செய்ய தயை சிந்தையும்
யுகமெங்கும் உள்ள மக்களெல்லாம்
உடன் பிறப்புகளே எனும் சமத்துவமும்

11. சமத்துவமும் சகலரையும் போற்றுகின்ற
சமரச சன்மார்க்க நெறி கூடி
நேமம்பட ஞானிகள் தேடுகின்ற
நீதிமான்களாகவே சிறப்பர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி